**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .63/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : தேவகுரு | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : பாஸ்கரன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( ( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15.04.2024**

---

**முதல் விசாரணை:**

நான் ராஜபாளையம் சம்சியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் மற்றும் அவரது கணவர் எங்கள் ஊர்காரர்கள். சாட்சி வள்ளிநாயகம் எனது ஊர்காரர். விபத்தில் இறந்துபோன கந்தவேல் புகார்தாரரின் கணவர் ஆவார். எங்கள் ஊரில் இருந்து பழனி பாத யாத்திரைக்காக நானும் மேற்சொன்ன கந்தவேல் மற்றும் வள்ளிநாயகம் ஆகியோர் ஊர்காரர் சில பேருடன் புறப்பட்டு சென்றோம். அப்போது நாங்கள் புறப்பட்டு சென்ற மூன்றாவது நாளான 14.01.2019 ம் தேதி பேரையூர் உசிலம்பட்டி ரோட்டில் சமத்துவபுரம் தண்ணீர் தொட்டி அருகே நானும், வள்ளிநாயமும் கந்தவேலும் சற்று முன்னும் பின்னுமாக நடந்து சென்று கொண்டிருந்தோம். எனக்கு பின்னால் கந்தவேலு நடந்து வந்து கொண்டிருந்தார். ரோட்டின் இடது ஓரமாக மண் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தோம். எங்களுக்கு பின்னால் வந்த அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாக வந்து கந்தவேல் மீது மோதியதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மூச்சு பேச்சு இல்லாமல் இருந்தார். அரசு பேருந்தில் இருந்து ஓட்டுநர் இறங்கி வந்து பார்த்தார். ஓட்டுநர் உதவியுடன் அதே பேருந்தில் ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன்பின்பு மதுரைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அதன்பின்பு அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னுடன் இருந்த சாட்சி வள்ளிநாயகம் போன் மூலமாக அவரது மனைவிக்கு தகவல் சொன்னார். ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

இறந்துபோன கந்தவேலுக்கு முன்னால் நானும் வள்ளிநாயகமும் சுமார் 10 அடி துாரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தோம். டம் என்ற சத்தம் கேட்ட பின்பு தான் நாங்கள் திரும்பி பார்த்தோம் என்றால் சரிதான். நாங்கள் அதே பேருந்தில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். கந்தவேலுடன் வேறு யாரும் நடந்து வரவில்லை. சம்பவ நடந்த சமயத்தில் நானும் வள்ளிநாயகமும் அங்கு இல்லை என்றும்பேருந்து ஓட்டுநர், நடத்துனர் மட்டும் தான் கந்தவேலை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் , அதன் பின்பு தான் நாங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம் என்று சொன்னால் சரியல்ல. உசிலம்பட்டியிலிருந்து கந்தவேலை மதுரைக்கு அனுப்பி வைத்தபிறகு நாங்கள் பாத யாத்திரை சென்றுவிட்டோம்.

S.d./Devaguru

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,Usilampatti.